NUS National University of Singapore
**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 10 September 2021

# கம்போங் கிளாம் பற்றிய நூலுக்கு $50,000 புத்தகப் பரிசு

கம்போங் கிளாம் பற்றிய நூல், $50,000 மதிப்புள்ள தேசிய பல்கலைக்கழக வரலாற்று நூல் பரிசைப் பெற்றுள்ளது.

லெலுஹூர்: சிங்கப்பூரின் கம்போங் கிளாம் என்று பெயர்கொண்ட அந்நூலை உள்ளூர் பதிப்பாளரும் அப்பகுதியில் முன்பு வசித்தவருமான ஹிடாயா அமின் எழுதியுள்ளார்.

அந்த வட்டாரத்தைப் பற்றிய வரலாற்றுத் தகவல்கள், திருவாட்டி ஹிடாயாவின் நினைவலைகள், முந்தைய குடியிருப்பாளர்களின் நேர்காணல்கள் அடங்கிய நூல் அது.

கடந்த 2018ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக வரலாற்றுநூல் பரிசுக்கு இவ்வாண்டு ஐந்து நூல்கள் தேர்வுசெய்யப்பட்டிருந்தன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.